# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2023.11.10 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# ஆவணங்கள் பதிவுக் கட்டளைச்சட்டம் (திருத்தம்)

***(117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தைத்***
***திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால்*
*பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விலை: ரூபா *15.00***　　　**தபாற்செலவு : ரூபா 50.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து 2023 ஆம் ஆண்டின் ………….. ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாகவுள்ள ஏதேனும் கொடுக்கல்வாங்கலைத் தவிர்ப்பதாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம், அசைவுள்ள ஆதனத்திலான பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்புடையற்பாலனவான ஏற்பாடுகளைச் செய்வதற்கு 2023 ஆம் ஆண்டின் …………… ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டம் சட்டமாக்கப்பட்டதன் விளைவாக, அசைவுள்ள ஆதனத்திலான பாதுகாப்பு உரிமைகளை உருவாக்குகின்ற சாதனங்களைப் பதிவுசெய்வதுடன் தொடர்புடைய ஏற்பாடுகளைக் கொண்டுள்ள முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் அத்தியாயத்தை நீக்குகின்றது.

**வாசகம் 4** : இவ்வாசகம், அசைவுள்ள ஆதனத்திலான பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்புடையற்பாலனவான ஏற்பாடுகளைச் செய்வதற்கு 2023 ஆம் ஆண்டின் …………… ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டம் சட்டமாக்கப்பட்டதன் விளைவாக, காணியைப் பாதிக்கின்ற ஏற்புடைமையை வரையறுக்கின்ற முதன்மைச் சட்டவாக்கத்தின் அவ்வத்தியாயத்தின் தலையங்கத்தை மாற்றீடு செய்கிறது.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அசைவுள்ள ஆதனத்திலான பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்புடையற்பாலனவான ஏற்பாடுகளைச் செய்வதற்கு 2023 ஆம் ஆண்டின்; …………… ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டம் சட்டமாக்கப்பட்டதன் விளைவாக, காணியைப் பாதிக்கின்ற சாதனங்களுக்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் V ஆம் அத்தியாயத்தின் ஏற்புடைமையை வரையறுப்பதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், அது, இச்சட்டமூலத்தின் 5 ஆம் வாசகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், அது, இச்சட்டமூலத்தின் 5 ஆம் வாசகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 8** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துவதுடன், அது இச்சட்டமூலத்தின் 3 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம், ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏலவே பதிவுசெய்யப்பட்ட சாதனங்களின் வலுவுறுத்தத்தகு காலப்பகுதி தொடர்பிலும், 2023 ஆம் ஆண்டின் ……………. ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் நடைமுறைக்கு வருவதன்மேல் அச்சட்டத்தின்கீழ் அச்சாதனங்களைப் பதிவுசெய்வதற்கான தேவைப்பாடு தொடர்பிலும், அவை மேலும் வலுவுறுத்தத்தக்கனவாக இருப்பதற்கெனவும் அவற்றின் முன்னுரிமை தொடர்ந்தும் மேலோங்குவதற்கெனவுமான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

*ச.வ.ஓ. 69/2017*

## *(117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்*

1. (1) இச்சட்டம், 2023ஆம் ஆண்டின் ......... ஆம் இலக்க, ஆவணங்கள் பதிவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தில் எத்தேதியன்று சட்டமூலம் சட்டமாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*117 ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்*

2. (இச்சட்டத்தில் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில் (xi) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

> ''(xii) 2023 ஆம் ஆண்டின் ......... ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்தாகவுள்ள கொடுக்கல் வாங்கலொன்று தொடர்பிலான ஏதேனும் உடன்படிக்கை.''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் IV (16 முதல் 24 வரையிலான பிரிவுகள், இரண்டுமுட்பட) இத்தால் நீக்கப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் அத்தியாயத்தை நீக்குதல்

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் V ஆம் அத்தியாயத்தின் தலையங்கம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக பின்வரும் தலையங்கம் இடப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் V ஆம் அத்தியாயத்தின் தலையங்கத்தை மாற்றீடுசெய்தல்

"அத்தியாயம் V
காணியைப் பாதிக்கின்ற சாதனங்களுக்கு
ஏற்புடையற்பாலனவான ஏற்பாடுகள்".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு, "காணியைப் பாதிக்கின்ற சாதனமொன்று அல்லது அடமானம், ஈடு அல்லது விற்பனை உண்டியல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "காணியைப் பாதிக்கின்ற சாதனமொன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "காணியை அல்லது அசைவுள்ள ஆதனத்தைப் பாதிக்கும் சாதனமொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "காணியைப் பாதிக்கும் சாதனமொன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும்:-

"பல்வேறு
மாவட்டங்களில்
அமைந்துள்ள
காணி.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு, "அவரினால் பதிவுசெய்யப்பட்ட காணியைப் பாதிக்கின்ற சாதனங்களினதும், அடமானங்கள், ஈடுகள் அல்லது விற்பனை உண்டியல்களினதும் அத்தகைய சுட்டிகளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்

"அவரினால் பதிவுசெய்யப்பட்ட காணியைப் பாதிக்கின்ற சாதனங்களினது அத்தகைய சுட்டிகளை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்

8. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையானது, அவ்வட்டவணையின் பாகம் III இல் அதன் விடயம் 2 இல், "ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்குமாக III, IV, V, VI ஆம் அத்தியாயங்களின் கீழ் வைத்திருக்கப்படும் ஏதேனும் புத்தகத்தை அல்லது சுட்டியை" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்குமாக III, V அல்லது VI ஆம் அத்தியாயத்தின்கீழ் வைத்திருக்கப்படும் ஏதேனும் புத்தகத்தை அல்லது சுட்டியை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் அத்தியாயத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சாதனங்களின் வலுவுறுத்தற் தன்மை

9. (1) நியமிக்கப்பட்ட திகதியன்று–

(அ) அசைவுள்ள ஆதனத்தின் அடமானமொன்றை, ஈடொன்றை அல்லது விற்பனை உண்டியலொன்றை; அல்லது

(ஆ) (i) ஏதேனும் அசைவற்ற ஆதனமொன்றின் பொருத்துகையிலான அக்கறையொன்றை; அல்லது

(ii) சாட்டுதலொன்று அசைவற்ற ஆதனத்திலுள்ள சாட்டுதல் கொடுப்பவரின் அக்கறையை உரித்துமாற்றாத அல்லது கைமாற்றாதவிடத்து, ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் ஈடு, பொறுப்பு அல்லது குத்தகையொன்றின்கீழான கொடுப்பனவுக்கான உரிமையொன்றின் சாட்டுதலொன்றை,

உருவாக்குகின்றதும், முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் அத்தியாயத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதுமான சாதனமொன்று வலுவிலுள்ளவிடத்து, அசைவுள்ள ஆதனத்தின் அத்தகைய அடமானம், ஈடு அல்லது விற்பனை உண்டியல் அல்லது அசைவற்ற ஆதனத்தின் பொருத்துகையொன்றிலுள்ள அத்தகைய அக்கறை அல்லது அசைவற்ற ஆதனத்தின் ஈடு, பொறுப்பு அல்லது குத்தகையொன்றின் கீழான கொடுப்பனவுக்கான உரிமையொன்றின் அத்தகைய சாட்டுதல், நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குத் தொடர்ச்சியாக வலுவுறுத்தத்தக்கதாக இருத்தல் வேண்டும்; ஆனால், அத்தகைய

இரண்டாண்டு காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர், 2023 ஆம் ஆண்டின் ……… ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளின்கீழ் அசைவுள்ள ஆதனத்தின் அடமானம், ஈடு அல்லது விற்பனை உண்டியலொன்றாக, அல்லது அசைவற்ற ஆதனத்தின் பொருத்துகையொன்றிலுள்ள அக்கறையொன்றாக அல்லது அசைவற்ற ஆதனத்தின் ஈடு, பொறுப்பு அல்லது குத்தகையொன்றின்கீழான கொடுப்பனவுக்கான உரிமையொன்றின் சாட்டுதலொன்றாகப் பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சாதனமொன்று, 2023 ஆம் ஆண்டின் ….. ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதன்மீது, அத்தகைய சாதனம் முதன்முதலில் சட்டப்படி வலுவுறுத்தத்தக்கதாக எத்திகதியன்று வந்ததோ அத்திகதியிலிருந்து முழுநிறைவான தாக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சாதனம் முதன்முதலில் சட்டப்படி வலுவுறுத்தத்தக்கதாக வந்தநேரத்தில் எந்த முன்னுரிமைக்கு உரித்துடையதாக வந்ததோ அந்த முன்னுரிமை தொடர்ந்து மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவுறுவதற்கு முன்னர் 2023 ஆம் ஆண்டின் ……… ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படாத (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சாதனமொன்று, அத்தகைய காலப்பகுதி முடிவுற்றதன்பின்னர் சட்டப்படி வலுவுறுத்தத்தக்கதல்லாததாக வருதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

10. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.